# உங்கள் சுகாதாரம், உங்கள் பாதுகாப்பு: வேலையாட்களுக்கான ஒரு வழிகாட்டி
## Your health, your safety: A guide for workers

இத்தகவல்கள் டிரேட் யூனியன் காங்கிரஸ் (TUC) கூட்டுறவுடன் ஹெல்த் அண்டு ஸேஃப்டி எக்ஸிகியூடிவால் (HSE) கொடுக்கப்பட்டுள்ளது. சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி ஆலோசனையும் ஆதவும் அளித்து, வேலையாட்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலனை பாதுகாக்கும் அரசாங்க நிறுவனமே HSE ஆகும். 6.5 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்ட 70-ற்கும் மேற்பட்ட டிரேட் யூனியன்களின் பிரதிநிதி TUC ஆகும். வேலையிடத்தில் நியாயங்கள் மற்றும் சிறந்த தரத்திற்கு இது போரடுகிறது.

நீங்கள் ஒரு வேலையாளாக இருந்தால் (முழு நேர அல்லது பகுதி நேரம், தற்காலிக அல்லது நிரந்தரம்), உங்கள் உரிமைகள் என்ன, உங்களை வேலைக்கு அமர்த்தியுள்ளவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கலாம், உங்கள் பொறுப்புகள் என்ன மற்றும் உதவிக்கு எங்கு செல்வது போன்ற தகவல்களை இது அளிக்கிறது. வேலைக்கான பயிற்சி பெறுபவர், தொழிற்பயிற்சியில் இருப்பவர், தரும நிறுவனத்திற்கு உதவி செய்பவர், பல இடங்களுக்குச் சென்று வேலை பார்ப்பவர் அல்லது வீட்டில் வேலை செய்பவர் ஆகிய அனைவருக்கும் கூட இது பொருந்தும்.

தற்காலிக ஊழியர், எப்பொழுதாவது வேலை செய்பவர் அல்லது ஏஜென்சி வேலையாளராக இருந்தால், உங்கள் எம்ப்ளாய்மென்ட் பிஸினஸ்/ஏஜென்சி, கேங்மாஸ்டர், கான்ட்ராக்டர் அல்லது வேலை அளிப்பவர் இதில் கொடுக்கப்பட்டுள்ள உங்கள் உரிமைகளை நீங்கள் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

### பின்வருவனவற்றிற்கு உங்களுக்கு உரிமை உள்ளது:

- உங்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சரியான முறையில் கட்டுப்படுத்தப்படும் இடத்தில் வேலை செய்வதற்கு.
- நீங்கள் அபாயத்தில் இருப்பதாக நினைத்தால், வேலையை நிறுத்தி அவ்விடத்தை விட்டுச் செல்வதற்கு.
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக உங்களுக்கு உள்ள கவலைகளை உங்களை வேலைக்கு அமர்த்தியுள்ளவரிடம் கூறுவதற்கு.
- பிரச்சினையில் மாட்டிக் கொள்ளாமல், உங்கள் உள்ளூர் அதாரிடி அல்லது HSE உடன் தொடர்பு கொள்வதற்கு.
- டிரேட் யூனியனில் சேர்ந்து, பாதுகாப்புப் பிரதிநிதி ஆவதற்கு.
- நீங்கள் பாதுகாப்புப் பிரதிநிதி ஆனால், வேலை நேரத்தில் பயிற்சி பெறுவதற்கு.
- தொடர்ந்து ஆறு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்தால், குறைந்த பட்சம் 20 நிமிடங்களுக்கு ஓய்வு பெறுவது மற்றும் வருடாந்திர விடுப்பு பெறுவது.

### நீங்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- உங்கள் சொந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினைக் கவனிக்க வேண்டும், மற்றும் உங்கள் செய்கையினால் பாதிப்படையக் கூடியவர்களையும் கவனிக்க வேண்டும்.
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்காக மற்றவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். அதற்கெனக் கொடுக்கப்பட்ட எதனுடனும் தலையிடவோ அல்லது தகாத முறையில் உபயோகிக்கவோ கூடாது.

### பின்வருவனவற்றை உங்களை வேலைக்கு அமர்த்துபவர் கூற வேண்டும்:

- உங்கள் சுகாதாரத்திற்கும் பாதுகாப்பிற்கும் வேலை இடத்தில் உள்ள அல்லது ஏற்படக்கூடிய அபாயங்கள்.
- உங்கள் சுகாதாரம் அல்லது பாதுக்காப்பைப் பாதிக்கக்கூடியவைகள் மற்றும் மாற்றங்கள்.
- உங்கள் வேலையை எவ்வாறு பாதுகாப்பாகச் செய்ய வேண்டும்.
- உங்கள் பாதுகாப்பிற்காக என்ன செய்யப்பட்டுள்ளது.
- எவ்வாறு முதலுதவி பெறுவது.
- எமர்ஜென்சியில் என்ன செய்வது.

### பின்வருவனவற்றை உங்களை வேலைக்கு அமர்த்துபவர் இலவசமாக அளிக்க வேண்டும்:

- உங்கள் வேலையைப் பாதுகாப்பாகச் செய்வதற்கான பயிற்சி.
- தேவைப்படும் இடத்தில் பாதுகாப்புப் பொருட்கள் (உடைகள், காலணிகள், கண் மற்றும் காதிற்கான பாதுகாப்பு, கையுறைகள், முகவுறைகள் போன்றவை)
- உங்கள் வேலையினால் உடல்நல பாதிப்பு ஏற்படக்கூடுமானால், உடல் பரிசோதனைகள்.
- இரவு நேரங்களில் வேலை செய்தால், வழக்கமான முறையில் உடல் பரிசோதனைகள் மற்றும் வேலை தொடங்குவதற்கு முன்பும் ஒரு பரிசோதனை.

(குறித்துக் கொள்ளவும்: நீங்கள் முழுவதுமாக சுய வேலையாளராக இருந்தால், முதலுதவி ஏற்பாடுகள், பயிற்சி, பாதுகாப்புப் பொருட்கள், உடல் பரிசோதனைகள் மற்றும் உங்கள் வேலை நேர ஏற்பாடுகள் ஆகிய அனைத்திற்கும் நீங்களே பொறுப்பாவீர்கள்.)

### பின்வரும் தகவல்களை உங்களை வேலைக்கு அமர்த்துபவர் கட்டாயமாக அளிக்க வேண்டும்:

- ஹெல்த் அண்டு ஸேஃப்டி சட்டம்: நீங்கள் என்ன தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு உதவி செய்யக்கூடிய நபர்களின் விவரங்களை அவர்கள் அளிக்க வேண்டும்.
- அவர்களின் ஹெல்த் அண்டு ஸேஃப்டி திட்ட அறிக்கை.
- எம்ப்ளாயர்களின் லையபிலிடி (கட்டாய இன்சுரன்ஸ்) சான்றிதழ் வேலையிடத்தில் அனைவருக்கும் தெரியுமாறு மாட்டப்பட்டிருக்க வேண்டும்.

### உங்கள் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பற்றி நீங்கள் கவலை கொண்டால், என்ன செய்ய வேண்டும்:

- ஆலோசனை பெற அல்லது புகார் செய்வதற்கு, HSEஇன் தகவல் தொடர்பு எண் 08701 545500-ல் தொடர்பு கொள்ளவும் அல்லது TUC-ன் நோ யுவர் ரைட்ஸ் (உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்) தொடர்பான 0870 600 4882 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் மொழியில் பேச விரும்பினால், 08701 545500 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு ஆபரேட்டரிடம் உங்கள் மொழியைக் கூறவும்.
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக உங்கள் வேலையை நீங்கள் இழந்தால், அதனை எம்ப்ளாய்மென்ட் டிரைபியூனலிடம் முறையிடலாம். உங்கள் டிரேட் யூனியன் அல்லது உள்ளூர் சிட்டிசன்ஸ் அட்வைஸ் பியூரோவிடம் ஆலோசனை பெறவும்.